ஸ்டெயின்லஸ் ஸ்டீல்

*243. வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் (Stainless Steel sheets) கொடுக்கப்படுகின்றது?

(இ) தமிழகத்தின் தேவை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் என்று ஒதுக்கப்படுவதில்லை.

(இ) தமிழகத்தின் மொத்தத் தேவை ஆண்டொன்றுக்கு 51,800 மெட்ரிக் டன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியையும் எடுத்து கொள்ளலாம்.

*244 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், காட்பாடியில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதராஸ் ஸ்டெயின்லஸ் ஸ்டீல்ஸ் லிமிடெட் கம்பெனிக்கு 1963-ம் ஆண்டில் 7,000 டன் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் செய்ய உரிமம் வழங்கப்பட்டது. உரிமம் நீடித்தம் சம்பந்தமாக இந்திய அரசுக்குச் சிபாரிசு செய்து எழுதியுள்ளோம். இந்திய அரசு மேற்படி நிறுவனத்தில் தொழில் நுட்பம், பொருளாதாரம் ஆகிய தன்மைகளைப்பற்றிய குறிப்புகளைக் கேட்டிருக்கிறது. இது சம்பந்தமாக திரு. தஸ்டூர் கம்பெனியிடம் தற்போதுள்ள நிலைமையைக்கொண்டு மேற்படி நிறுவனத்தின் தொழிற் நுட்பம் பொருளாதாரம் ஆகிய தன்மைகளை ஆய்ந்து "மறு மதிப்பீடு" அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு கேட்டுள்ளோம். இவ்வறிக்கையைப் பெற்றவுடன் அதைப் பரிசீலனை செய்த பின் மீண்டும் இந்திய அரசுக்கு எழுதலாம்.

திரு. ஏ. எம். இராஜா : தமிழ் நாட்டில் போதிய அளவுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடுகள் கிடைக்கவில்லை என்று ஸ்டெயின்லஸ் ஸ்டீல் சாமான்களைத் தயாரிக்கும் தொழிலதிபர்கள் புகார் செய்திருக்கிறார்களா? நம்முடைய தமிழ் நாட்டிற்குத் தேவையான அளவுக்கு மத்திய அரசிடமிருந்து ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகள் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?